செய்தி வெளியீட்டு எண்–571 நாள்–16.72008

# பத்திரிக்கை செய்தி

## பேரூராட்சிகள் துறை பொறியாளர்களுக்கு "பொலிரோ" ஈப்புகள் வழங்கும் விழா

16.07.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் பேரூராட்சிகள் துறையின் ஒரு செயற்பொறியாளர் மற்றும் 20 உதவி செயற்பொறியாளர்களுக்கும் ஆக 21 பொலிரோ ஈப்புகள் வழங்கப்பட்டன. சென்னை கோபாலபுரத்தில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்ற இவ்விழாவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை அரசு செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப., அவர்கள் பேரூராட்சிகள் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

2008-09 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், பேரூராட்சிகள் ஆணையரக செயற்பொறியாளர் மற்றும் 16 மண்டலங்களில் உள்ள 20 உதவி செயற்பொறியாளர்களுக்கும், திட்டப் பணிகளை பொது மக்களுக்கு பயன்தரத்தக்க வகையில் வேகமாகவும், தரமாகவும் செயல்படுத்தி, கண்காணிக்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டும், பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பில் 21 பொலிரோ ஈப்புகள் வழங்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பிற்கிணங்க 21 பொலிரோ ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் ஈப்புகள் வழங்கப் பட்டுள்ளதால், பொறியியல் பிரிவு பலப்படுத்தப்பட்டு, மிக அதிக அளவிலான பணிகளை கண்காணிக்கும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, பேரூராட்சிகள் பொறியியல் பிரிவினை பலப்படுத்திட பேரூராட்சிகள் துறைக்கு கூடுதலாக 5 உதவி செயற்பொறியாளர் பணியிடங்களும், 35 உதவி/இளநிலை பொறியாளர்கள் பணியிடங்களும், 23 வரைவாளர் பணியிடங்களும், 250 பணி ஆய்வாளர் பணியிடங்களும், ஆக மொத்தம் 313 பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக, மாவட்டங்களில் நடைபெறும் திட்டப்பணிகள் தரமாகவும், விரைவாகவும், செயல்படுத்திட திறம்பட கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது பேரூராட்சிகளில் நடைபெற்று வரும், பகுதி 2 திட்டம், பன்னிரண்டாவது நிதிக்குழு மான்யம், பேரூந்து நிலைய அபிவிருத்தி பணிகள், சந்தைகள் மேம்பாடு திட்டம், வணிக வளாகங்கள் கட்டுதல், பூஙகாக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு பணிகள், குடிசைப் பகுதிகளில் உள்ள நலிந்தோர்க்கான வீடுகட்டும் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), ஒருஙகிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP), நகர்ப்புற எழைகளுக்கான குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (BSUP) போன்ற பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பேரூராட்சி பொது நிதி உள்பட 16000 க்கும் அதிகமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளை விரைந்து செயல்படுத்தவும், திறம்பட கண்காணிக்கவும், செயற்பொறியாளர் மற்றும் 20 உதவி செயற்பொறியாளர்களுக்கும் ஆக மொத்தம் 21 ஈப்புகள் ரூ.105.00 லட்சம் செலவில் வழங்கப்பட்டன.

அரசு நடைமுறைபடுத்தும் நலத்திட்டங்கள் அனைத்தும் பொது மக்களுக்கு தரமானதாகவும், விரைவாகவும் சென்றடையும் வகையில் அலுவலர்கள் அனைவரும் செயல்பட வேண்டுமென, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.